# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 100/2014

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அசோகன் | மதம் | : |
| த/பெ | : கிருஷ்ணம நாயுடு | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**14.08.2024**

<u>பி.சா2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 1ம் பிரதிவாதி பூபதியின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் ராஜகோபால் ஆகும். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ராஜகோபால் 70 வருடமாக வீடு கட்டி குடியிருந்த வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் கதவு எண் தெரியாது. வீடு கட்டியிருந்தது தெரியும். பூபதியின் உடன் பிறந்தவர்கள் எத்தனைபேர் என்றால் 4 பேர். குமுதா, ராஜேஸ்வரி, பூபதி, நாகபூசனம் ஆவார்கள். பூபதியும் அவரது சகோதரர் நாகபூசனமும் தனித்தனியாக வீடு கட்டி குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். பூபதிக்கு இந்திரா குடியிருப்பு திட்டத்தின்கீழ் 2015-2016ல் வீடு கட்ட அனுமதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் பூபதிக்கு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

2. வீடு விசயமாக பிரச்சனை ஏற்பட்டு நான் மத்தியஸ்தம் செய்ததாக கூறிருப்பதில் நான் என்ன மத்தியஸ்தம் செய்தேன் என்றால் வீடு வழக்கு தாக்கல் செய்தவருக்கும் இல்லை பூபதிக்கும் இல்லை என்று முடிக்கப்பட்டது. பூபதிக்கு இந்திரா குடியிருப்பு திட்டத்தின்கீழ் 2015-2016ல் வீடு கட்ட அனுமதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ராஜேஸ்வரி தாவா சொத்தான புல எண் 139, 140/2, 6, 3, 8 ஆகியவற்றை அளந்து பார்த்தபின்புதான் வீடு ஒதுக்க வேண்டும் என

ஆட்சேபணை செய்ததால் பூபதிக்கு வீடு கட்ட அனுமதி அளிக்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட புல எண்கள் 139, 140/2, 6, 3, 8 ஆகியவற்றை அளந்து பார்த்து நில அளவையர் அளந்து அறிக்கை கொடுத்த பின்பு 28.08.2014 அன்று திருத்தணி வட்டார வளர்ச்சி அலுவலர் உரிய காலத்தில் பணி ஆரம்பிக்கப்படதாததால் பயனாளிக்கு கொடுக்கப்பட்ட பணியினை ரத்து செய்து உத்தரவு பிறப்பித்தார் என்றால் தெரியாது.

3. சூரியநகரம் கிராமம் புல எண்.140/3A, 4A, 4B, 4C, 4D, 4E ஆகிய உட்பிரிவுகளுக்கு உட்பட்ட 6 1/2 ெஹக்டேர் நிலம் பிகி நாயுடு மகன் குப்புசாமி நாயுடு, அப்பு நாயுடு மகன் குட்டி நாயுடு மற்றும் அவரது மகன்கள் இளநாடி பக்தவச்சல நாயுடு, அப்பா நாயுடு, கிருஷ்ணம நாயுடு ஆகிய 5 நபர்கள் பேரில் பட்டா எண்.447 ல் பதிவாகி இருந்தது என்றால் மொத்த சொத்தையும் நான் வாங்கயுள்ளேன். மேற்படி சூரியநகரம் கிராமம் புல எண்.140/3A, 4A, 4B, 4C, 4D, 4E ஆகிய சொத்துக்களுக்கும் பூபதிக்கும் ஏதேனும் சம்மந்தம் உள்ளதா என்றால் சம்மந்தம் இல்லை.

4. சூரியநகரம் கிராமம் புல எண்.140/4 நிலத்தை நான் கிரையம் வாங்கியுள்ளதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வாதியின் இடத்தில் புல எண்.140/3E ல் வடக்கே கிழமேலாக 3 1/2 அடி ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதி பூபதி வீடு கட்டியுள்ளார் என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் வந்து தாவா சொத்தை அளந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் மத்தியஸ்தம் செய்தும் வாதி கேட்கவில்லை என்பதற்காக நான் மனகசப்பில் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)